**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No.32/2020 PW .1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :அம்சவள்ளி | தந்தை/கணவர் பெயர்:தங்கராஜ் | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.04.2026

---

**(1 முதல் 4 எதிரிகள் ஆஜர்)**

**01.04.2026 முதல் விசாரணை:**

1. நான் தற்போது காளாப்பூரில் குடியிருக்கிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார். 25.03.2019 ம் தேதி இரவு சுமார் 07.30 மணியளவில் நானும் எனது குழந்தைகளும் எனது வீட்டில் இருந்த போது எங்கள் வீட்டிற்கும் எதிரிகள் வீட்டிற்கும் அருகே உள்ள புறம்போக்குஇடத்தில் எதிரிகள் குப்பைகளை போட்டும், மாடு, மாட்டு வண்டியை வைத்தும் இருந்தார்கள். மேற்படி இடத்தில் வைத்து எனது கணவர் தங்கராஜ் நாகராஜ் இடம் ஏன் புறம்போக்கு இடத்தில் இவ்வாறு செய்கிறீர்கள் என்று 25.03.2019 ம் தேதி கேட்தற்கு நாகராஜ் எனது கணவரிடம் சண்டை போட்டார். அப்போது செல்வம் ரோட்டில் நின்று கொண்டு என்னை பார்த்து தேவிடியா என்று அசிங்கமாக பேசினார். மேலும் கேட்ட வார்த்தைகளால் பேசினார். ஏன் இவ்வாறு பேசிகிறீர்கள் என்று செல்வத்திடம் நான் கேட்டதற்கு செல்வம் என்னிடம் நான் அப்படி தான் பேசுவேன் என்று சொல்லி என்னை ஓங்கி அறைந்து விட்டார். நாகராஜ் எனது தலை முடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி விட்டார். பாப்பு, மலர் இருவரும் கம்பிளை வைத்து எனது முதுகில் எறிந்து விட்டார்கள். எனக்கு அப்போது அறுவை சிகிச்சை செய்து 2 மாதங்கள் தான் ஆகி இருந்தது. நாகராஜ் என்னை இழுத்து போட்டு அடித்ததில் எனக்கு வயிற்றில் வலி ஏற்பட்டது. அருகே இருந்தவர்கள் என்னை சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். மறுநாள் காவல் நிலையம் சென்று நான் நடந்த சம்பவம் குறித்து புகார் கொடுத்தேன். மேற்படி என்னிடம் காட்டப்படும் புகார் மனு

நான் கொடுத்தது தான். அந்த புகாரை எனது கணவர் எழுதினார். (**அந்த புகார் மனு அதசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

2. எனது வீடும் எதிரிகள் வீடும் பக்கத்து வீடு ஆகும். எங்களுக்கும் எதிரிகளுக்கும் பொது குடிநீர் குழாய் உள்ளது. தண்ணீர் பிடிக்கும்போது ஒரே ஒரு முறை சம்பவத்திற்கு முன்பு பிரச்சனை வந்தது. வேறு பிரச்சனைகள் எங்களுக்குள் இல்லை. பொது இடத்தை ஆக்கிரமித்து குப்பைகள் போடுவது சம்பந்தமாக புகார் ஏதும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர் உடன் பிரச்சனை செய்தது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் வழக்கு சம்பவத்திற்கு 2 நாட்களுக்குள் முன்பு பிரச்சனை நடந்தது. எனவே புகார் கொடுக்கவில்லை. உண்மையிலேயே சம்பவம் நடந்து இருந்தால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவை நான் சொல்ல சொல்ல எனது கணவர் எழுதினார். எனக்கு எழுத படிக்க தெரியும். 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் புகார் மனு ஏதும் யாருக்கும் எழுதி கொடுக்கவில்லை. நாகராஜ் அடிக்கவில்லை. செல்வம் தான் எனது கன்னத்தில் அறைந்தார். அது இடது கன்னம்மா, வலது கன்னம்மா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. 3, 4 எதிரிகள் எங்கு வைத்து எனது உடம்பில் கம்பியைவைத்து எறிந்தார்கள் என்று எனது புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். கம்பியை எறிந்த இடத்திற்கும் நான் நின்ற இடத்திற்கும் சுமார் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் நீதிமன்றத்தில் இருந்து வெளியே செல்லும் தூரம் வரை இருக்கும். கம்பியானது சுமார் 1 அடி இருக்கும். கம்பி எங்கு இருந்தது என்று எனக்கு தெரியாது. கம்பினாது எவ்வளவு எடை என்று எனக்கு தெரியாது. ஆனால் ஆள்காட்டி விரல் தடிமன் இருக்கும். ஒரே கம்பியை வைத்து தான் எதிரிகள் வைத்து எறிந்தார்கள். காயம் பட்டபோது அரசு மருத்துவமனைக்கு அன்று இரவே சென்று விட்டேன். வெளிநோயாளியாக இருந்தேன். 2 நாட்கள் சிகிச்சை பெற்றேன். நான் மருத்துவமனையில் தங்க வில்லை. சிகிச்சை பெற்றது சம்பந்தமான ஆவணம் ஏதும் நான் போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் ஞாபகம் இல்லை. சம்பவம் நடக்கும் போது யார் யார் இருந்தார்கள் என்று எனது புகார் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் செல்வி, ரவி, அழகு, கருப்பையா, தங்கராஜ் ஆகியோர்

எனது உறவினர்கள் என்றால் சரிதான். பொதுவாக வேலைக்கு சென்று விட்டு மாலை 5–6 மணிக்கு வீடு திரும்பி விடுவார்கள் என்றால் சரிதான். சம்பவம் 7.30 மணியளவில் நடைபெற்றது. சம்பவம் எனது வீட்டிற்கும் எதிரிகள் வீட்டிற்கு இடையில் நடந்தது. எனது வீட்டிற்கு அருகில் தான் மேற்படி அனைவரும் வசிக்கிறார்கள். சம்பவம் நடைபெறும் போது அனைவரும் வீட்டில் இருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற போது சத்தம் கேட்டு எனது அம்மா, அப்பா விலக்கிவிட்டார்கள். மேற்படி விவரத்தை எனது புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டுசொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் என்பதால் சாடை பேசுவதும் அடிக்கடி சண்டை போடுவதையும் மனதில்வைத்துகொண்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேனா என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அரசு மற்றும் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்குரைஞர்களுக்கு முன்பாக சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
சிங்கம்புணரி.